## திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

## அ.வ.எண்: 149/2019

## வா.சா.2

நாள்: 22.01.2024

வாதி தரப்பு சாட்சியாக வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 44 ஆம் விதியின் கீழ் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | துரைராஜ் | | |
| தந்தை பெயர் | ராமதாஸ் | | |
| கிராமம் | ஒன்பத்துவேலி | தொழில் | கிராம நிர்வாக அலுவலர், ஒன்பத்துவேலி |
| வட்டம் | பூதலூர் | வயது | 31 ஆண்டுகள் |

<u>முதல் விசாரணை :</u>

நான் பூதலூர் வட்டம் ஒன்பத்துவேலி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன் எனக்கு நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையின்பேரில் தற்போது சாட்சியம் அளிக்கிறேன்.

1) ஒன்பத்துவேலி என்பது பூதலூர் தாலுக்காவிற்குட்பட்டது என்றால் சரிதான். புலஎண்.229/3 ஒன்பத்துவேலி கிராமத்திற்குட்பட்டது என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 0.68.00 ஏர்ஸ் ஆகும். மேற்படி புல எண் ஒரு ஏக்கர் 68 செண்ட் நிலம் ஆகும். மேற்படி புல எண்ணுக்குரிய பட்டா ஆதியில் யார் பெயரில் இருந்தது என்றால் ராமசாமி செட்டியார் பெயரில் இருந்தது. ஆ பதிவேடு யார் பெயரில் இருந்தது என்றால் ராமசாமி செட்டியார் பெயரில் இருந்தது. தற்போது என்னிடம் காட்டப்படும் சிட்டா மற்றும் அடங்கல் ஒன்பத்தவேலி கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டது என்றால் சரிதான் மேற்படி ஆவணம் வா.சா.ஆ.27.ஆக குறியீடு செய்யப்படுகிறது.( பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணத்தை வழங்கிய கிராம நிர்வாக அலுவலர் தற்போது சாட்சியம் அளிக்கும் கிராம நிர்வாக அலுவலர் அல்ல என்றும் இந்த சாட்சியம் மூலம் இந்த ஆவணத்தை குறியீடு செய்யமுடியாது என்றும்

ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.) 1429 ஆம் பசலி ( 31.10.2019 ஆம் தேதி வழங்கப்பட்டது)

2) சிட்டாவில் புல எண். 229/3 B பரப்பு 0.24.28 பட்டாதாரர் பெயர் தங்கராசு மனைவி ராஜேஸ்வரி, பட்டா எண். 998 என 10(1) சிட்டாவில் உள்ளது. 2019 ஆம் வருடம் அடங்கலில் ராஜேஸ்வரி பெயரில் உள்ளது. சாகுபடி செய்துள்ளவர் பெயர் தங்கராசு மனைவி ராஜேஸ்வரி என்று கண்டுள்ளது. சிட்டா என்பது நிலையான பதிவேடு கிராம கணக்கு எண் 10 ஆகும். அடங்கல் என்பது வருடம் வருடம் மாறக் கூடியது. ஒவ்வொரு வருடமும் நிலங்களில் என்ன பயிர் சாகுபடி செய்யப்படுகிறது என்பதை பதிவு செய்வதற்குரிய பதிவேடு ஆகும். அடங்கல் என்பது சாகுபடி கணக்கு ஆகும்.

**குறுக்கு விசாரணை:**

ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.